# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1530/17 - 2008 ජනවාරි 01 වැනි අඟහරුවාදා - 2008.01.01

*1530/17 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்று வரிச் சட்டம்*

*13 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்று வரிச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (ஊ) பந்தியினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் பின்வரும் பற்றுக்கான பற்று வரியிலிருந்து விலக்களிக்கப்படல் வேண்டுமென தீர்மானித்து இத்தால் கட்டளை ஆக்குகின்றேன்.*

1. *பாடசாலை சிறுவர்களுக்கான ஏதேனும் போசாக்கு கருத்திட்டங்களினைச் சேயற்படுத்துவதற்கு செலவிடுவதற்காக வலயக் கல்விப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட பணம், ஏதேனும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி அல்லது ஏதேனும் கிராமிய வங்கியில் திறக்கப்பட்ட நடைமுறை அல்லது சேமிப்பு கணக்கிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் பற்று.*

2. *"அப்பிவெனுவன் அப்பி" நிதியத்தினால் ஏதேனும் வர்த்தக வங்கி, விஷேட வங்கி அல்லது நிதிக்கம்பனி ஒன்றில் திறக்கப்பட்ட ஏதேனும் நடைமுறை அல்லது சேமிப்பு கணக்கிலிருந்து பெறப்பட்ட பற்று ஒவ்வொன்றும்.*

3. *1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கிராமிய வங்கிகள் அல்லது ஏதேனும் கூட்டுறவுச் சங்கங்களினால் ஏதேனும் வர்த்தக வங்கி, விஷேட வங்கி அல்லது நிதிக் கம்பனியில் திறக்கப்பட்ட ஏதேனும் நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்கிலிருந்து பெறப்பட்ட பற்று ஒவ்வொன்றும்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*
*(நிதி, திட்டமிடல் அமைச்சர்)*

*நிதி திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு,*
*2008, சனவரி 01 ஆந் திகதி.*

*01-498*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*